**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

16.09.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 10.09.2011 முதல் 16.09.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**10-09-2011 முதல் 16-09-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 14 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 6 |
| 5. | வகுப்பறை வன்முறை | – |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 2 |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 10 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 2 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | 1 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 4 |
| | மொத்தம் | 49 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-35
## 10.09.2011 முதல் 16.09.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2275. | 10.09.2011 | **திருச்சி மாவட்டம்:** கரூர் அருகே உள்ள மருத்துவமனையில் சின்னப்பன் என்பவருக்குத் தவறான சிகிச்சை அளித்ததால் உடலில் ஊனம் ஏற்பட்டது. எனவே இதனால் மனம் உடைந்த சின்னப்பன் மருத்துவமனை வளாகம் முன்பு தீக்குளிக்க முயற்சி. | மருத்துவர்கள் அலட்சியம் | கலைஞர் டிவி |
| 2276. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா, பன்னீர்குண்டு கிராமத்தைச் சேர்ந்த பெரியகுருசாமி. தனது அண்ணன் மகள் கருப்புத்தாயை மற்றும் அவரது 10 மாத குழந்தையுடன் காணவில்லை என பெரியகுருசாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2277. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் விளாச்சேரி அருகே அரிசிவன் நகரைச் சேர்ந்த நாகூர்கனி மகள் சோபியா(14). அதே பகுதியைச் சேர்ந்த மாயக்கண்ணன், ராஜ்வெங்கட் மற்றும் பர்மா காலனியைச் சேர்ந்த இமான் மூவரும் சோபியாவை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாகப் புகார். மாயக்கண்ணன், ராஜ்வெங்கட் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2278. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த பஞ்சம்மாள். இவரது ஒன்றரை வயது பேத்தியை அதே பகுதியைச் சேர்ந்த 13 வயது மாணவன் பாலியல் பலாத்காரம். மாணவன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 2279. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசல் போலீஸ் ஸ்டேஷன் அருகில் பிளாஸ்டிக் பையில் இறந்த நிலையில் பெண் சிசு கிடந்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2280. | 10.09.2011 | **நெல்லை மாவட்டம்:** ஊத்துமலை அருகே பலபத்திராமபுரம் பஞ்சாயத்துக்குட்பட்ட கங்கணாங்கிணறு கிராமத்தில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள அரிஜன நடுநிலைப்பள்ளியில் பயிலும் முத்துராஜ்(11), ராதா(9), பாலகிருஷ்ணன்(9), ஆறுமுகத்தாய்(9), திருமேனி(11), மகராஜன்(9), கவிதா(9), திருமேனி(11). மாணவர்களை பள்ளிக்குச் செல்லும் வழியில் மர்ம நபர்கள் காரில் கடத்திச் செல்ல முயற்சி. பொதுமக்கள் குழந்தைகளை மீட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தினகரன் |
| 2281. | 10.09.2011 | **சென்னை மாவட்டம்:** பெருங்களத்தூர் நடுங்குன்றம் காந்தி ரோட்டைச் சேர்ந்த | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்துரு(32) மாற்றுத்திறனாளி. சந்துருவின் தம்பி சூர்யாவை காவலர்கள் கொலை வழக்கு தொடர்பாக கைது செய்தனர். சந்துருவின் வீட்டிற்கு விசாரணைக்கு வந்த காவலர்கள் வீட்டில் இருந்த சந்துருவின் தாய் தனலெட்சுமியை அடித்ததோடு தரக்குறைவாக பேசியதால் மனமுடைந்த சந்துரு காவலர்கள் முன்னிலையில் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுத் தற்கொலை. | | |
| 2282. | 11.09.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியில் இருந்து செமணாம்பதி வழியாக கேரளாவுக்கு ஆட்டோவில் கடத்த இருந்த 300 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி பறிமுதல் | தீக்கதிர் |
| 2283. | 11.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திராயிருப்பு ஒன்றியத்திற்குட்பட்ட வலையங்குளம் பகுதியில் வசிக்கும் அருந்ததியர் மக்களுக்கு தனியாக சுடுகாடு கட்டப்பட்டு வருகிறது. சுடுகாட்டிற்கு செல்ல சரியான பாதை இல்லை எனவும் சரியான பாதை அமைத்துத் தருமாறு அருந்ததியர் மக்கள் போராட்டம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2284. | 11.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் மண்டலமாணிக்கம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட எம். பச்சேரி கிராமத்தில் வசிக்கும் தலித் சமுகத்தைச் சேர்ந்த தங்கவேல் மகன் பழனிக்குமார்(16). மண்டலமாணிக்கம் அருகே ஆனைக்குளத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார். எம்.பச்சேரியை அடுத்த முத்துராமலிங்கவுரம் புதூரில் ஸ்ரீ கருப்பணசுவாமி கோயில் திருவிழாவிற்கு சென்ற இரவு திரும்பும் வழியில் பழனிக்குமாரை ஆதிக்கச் சமூகத்தினர் வெட்டிக் கொலை. இக்கொலை தொடர்பாக ஆறுமுகம், கருப்பையா, பச்சமால், மணிகண்டன், ஆபுத்திரன் ஆகிய 5 பேர் கைது. | தலித்துகள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2285. | 11.09.2011 | **சென்னை மாவட்டம்:** நித்தியானந்தா, நடிகை ரஞ்சிதா, சம்பந்தப்பட்ட சிடி. தொடர்பான வழக்கில் சன் பிக்சர்ஸ் சக்சேனாவையும், பட வினியோகஸ்தர் அய்யப்பனையும் சன் பிக்சர் கலாநிதிமாறனுக்கு எதிராக பொய் வாக்குமூலம் அளிக்குமாறு சிபிசிஐடி காவலர்கள் அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2286. | 11.09.2011 | **மதுரை மாவட்டம்:** தல்லாகுளத்தைச் சேர்ந்த முகம்மது ரபீக் தொண்டு அமைப்பின் உதவியாளர். இதே அமைப்பின் ஊழியர் பெரியநாயகத்தை முகம்மது ரபீக் சாதியைச் கூறி இழிவாக பேசியதோடு, அடித்துத் துன்புறுத்தியதாக பெரியநாயகம் புகார். | சிறுபான்மையினோர் மீதான வன்முறை | தினகரன் |
| 2287. | 11.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** சாத்தான்குளம் அருகே பழங்குளத்தைச் சேர்ந்த யேசுதாசன் | சிசுக்கள் மீதான | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவரது மாட்டுத்தொழுவத்தில் மண்பானையில் தொப்புள்கொடி அறுக்கப்படாத நிலையில் பிறந்து சில மணிநேரங்களே ஆன ஆண் குழந்தை கிடந்தாக புகார். | வன்முறை | |
| 2288. | 11.09.2011 | **வேலூர் மாவட்டம்:** பேர்ணாம்பட்டு அடுத்த சொக்கரிஷி குப்பத்தைச் சேர்ந்த பாபு மகள் ஜெயப்பிரியா(20). எதிர் வீட்டில் வசிக்கும் ஹரிஷ்(23) தன்னை திருமணம் செய்துக் கொள்ளுமாறு ஜெயப்பிரியாவை கட்டாயப்படுத்தியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக ஜெயபிரியா புகார். ஹரிஷ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2289. | 11.09.2011 | **மதுரை மாவட்டம்:** குலமங்கலம் மெயின்ரோட்டைச் சேர்ந்த சுந்தரராஜ் மகள் ரமா(17). நரிமேட்டில் உள்ள பெண்கள் கல்லூரியில் பி.எஸ்சி., முதலாமாண்டு மாணவி. கல்லூரிக்குச் சென்ற மாணவியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2290. | 12.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** மரக்காணம் அருகே கரிப்பாலையம் பகுதியைச் சேர்ந்த அய்யனார் மகள் ரேகா(3). அதே பகுதியைச் சேர்ந்த லெட்சுமிநாராயணன்(18), ராஜா(18), கார்த்திக்(18) மூவரும் ரேகாவின் காலில் கிடந்த வெள்ளிக்கொலுசு மற்றும் தோடுக்காக ஆசைப்பட்டு ரேகாவை அருகில் உள்ள குட்டையில் அமுக்கி கொலை செய்ததாக மூவரும் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2291. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கை மாவட்டம் பாட்டம் கிராமத்திலிருந்து லாரியில் 40–க்கும் மேற்பட்டோர் மதுரை சிந்தாமணி சுற்றுச்சாலை வழியாக வந்தபோது சிந்தாமணி சோதனைச்சாவடியில் இருந்து காவலர்களுக்கும், லாரியில் இருந்தவர்களுக்கும் இடையே மோதல். காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் படுகாயம். | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை & துப்பாக்கிச் சூடு | தினமணி |
| 2292. | 12.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தூத்துக்குடியில் இருந்து பரமக்குடிக்கு வரமுயன்ற தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான்பாண்டியனை காவலர்கள் வல்லநாடு அருகே கைது செய்தனர். இதனை எதிர்த்து அவரது ஆதரவாளர்கள் பரமக்குடி ஐந்துசாலையில் சாலை மறியல். காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 8 பேர் மரணம். | காவல் நிலையச் சித்திரவதை & துப்பாக்கிச் சூடு | தினமணி |
| 2293. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் வசிக்கும் சண்முகம் மனைவி மகாலெட்சுமி. மணிநகரத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவரிடம் ரூ. 25 ஆயிரம் கடன் வாங்கினர். சண்முகம் மற்றும் மகாலெட்சுமி இருவரும் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏமாற்றியதால் பாஸ்கரனின் அண்ணன் திருப்பதிராஜன் கணவன் மனைவி இருவரையும் கடத்தியதாக புகார். | | |
| 2294. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள புதுப்பட்டியைச் சேர்ந்த வல்லவன் வெளிநாட்டில் வேலை செய்தார். வல்லவனின் மனைவி வேல்மணி, மகன்கள் ஜீவா, பகவதி. மூவரையும் வல்லவனின் நண்பர் சீமான் கடத்தியதாக வல்லவன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2295. | 13.09.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சுரேஷ், மோகனபிரியா, தம்பதியினரின் 11/2 வயது குழந்தை மரணமடைந்தது. அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லை. மருத்துவர்களின் அலட்சியத்தால் குழந்தை இறந்தது என்று பெற்றோர் மற்றும் உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | கலைஞர் டிவி |
| 2296. | 13.09.2011 | **தேனி மாவட்டம்:** தேனி ரங்கசமுத்திரத்தில் பிற்பட்டோர் மாணவர் விடுதி சமையலர் வெங்கிடசாமி(5). விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் உதயகுமார், பாக்கியராஜ் உட்பட 8 மாணவர்களை வெங்கிடசாமி, தரக்குறைவாக திட்டியதோடு, கையில் கிடைத்த பொருளால் தாக்கியதாகப் புகார். வெங்கிடசாமி பணியிடைநீக்கம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2297. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் நகராட்சியில் அமைந்துள்ள அங்கான்வாடி மையத்தில் 29 குழந்தைகள் உள்ளனர். அங்கான்வாடியில் அடிப்படை வசதியில்லாமலும், நகராட்சி இலவச கழிப்பறை அருகிலும் அங்கான்வாடி மையம் செயல்பட்டு வருவதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2298. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** நெடுமதுரை கண்மாயில் தொடர்ந்து டிராக்டர் மற்றும் லாரிகள் மூலம் மணல் திருட்டு நடைபெறுவதாகப் புகார் கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என நெடுமதுரை கிராம குடிநீர் தொட்டி ஆப்பரேட்டர் தெய்வேந்திரன் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |
| 2299. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தனசேகரன் மகள் நித்யா(16). அருகில் வசிக்கும் மாணவரை காதலித்ததால் பெற்றோர் கண்டித்தனர். இதனால் மனமுடைந்த நித்யா தூக்கிட்டுத் தற்கொலை. | குழந்தை மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2300. | 13.09.2011 | **தேனி மாவட்டம்:** மேகமலை ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகரைச் சேர்ந்த அம்பிகா. தனது கணவர் இறப்பிற்கு சமூக பாதுகாப்புத்திட்டத்தில் நிதி உதவி வழங்குமாறு விண்ணப்பித்தேன். தனக்கு வந்த பணத்தை | பெண்கள் மீதான வன்முறை & மோசடி | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் மாதேஸ்வரன் மற்றும் இடைத்தரகர்கள் சேர்ந்து வேறு ஒரு பெண்ணை வைத்து தனக்கச் சேர வேண்டிய பணத்தை வாங்கி மோசடி செய்ததாக புகார். | | |
| 2301. | 13.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே உள்ள அமராவதி புதூரில் சமத்துவபுரம் அருகே ரோட்டில் தன் தாயுடன் தூங்கிக் கொண்டிருந்த 4 வயது சிறுமியை மர்ம நபர் பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 2302. | 13.09.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை கழுக்காணி முட்டம் பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் திவ்யா(23). சிதம்பரம் அருகே உள்ள முட்லூர் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் திவ்யாவை கடத்திச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினசூரியன் |
| 2303. | 13.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே செம்பட்டி என்.ஜி.ஓ. காலனியில் வசிக்கும் பூமிநாதன் மகள் சரவணக்கனி(17). வேலைக்கு சென்ற திரும்பும் வழியில் சரவணக்கனியை செம்பட்டியைச் சேர்ந்த முத்துக்குமரன், கருப்பசாமி, விநாயகம் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். மூவரும் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினசூரியன் |
| 2304. | 14.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை காமராசர் சாலை நவரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி துர்க்காதேவி(32) மகன் ஸ்ரீராம்(5). வீட்டில் தனியாக இருந்த துர்க்காதேவியை மர்ம நபர்கள் கொலை செய்ததோடு நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினசூரியன் |
| 2305. | 14.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த சுங்குவார்சத்திரம் அருகில் செல்லம்பட்டறை என்ற கிராமத்தில் வசிக்கும் நடிகை விசித்ராவின் தாய் வசந்தா(65), தந்தை வில்லியம்ஸ்(70). வீட்டில் தனியாக இருந்த வசந்தா மற்றும் வில்லியம்ஸ் இருவரையும் மர்ம நபர்கள் தாக்கியதில் தந்தை மரணம். நகை மற்றும் பணத்தைக் மர்ம நபர்கள் கொள்ளை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினசூரியன் |
| 2306. | 14.09.2011 | **மதுரை மாவட்டம்:** காமராஜர்புரம் பகுதியிலுள்ள 9ம் எண் ரேசன் கடையில் அதிகாரிகளின் சோதனையில் போது 220 கிலோ பாமாயில் எண்ணெய், 330 கிலோ ரேசன் அரிசி இருப்பில் குறைவாக இருந்தாக அதிகாரிகள் புகார். கடையில் மோசடி செய்ததாக விற்பனையாளர் பெருமாள் கைது. | மோசடி | தினமணி |
| 2307. | 14.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வர மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் வலைகளை வெட்டிவிட்டு மீன் பிடிக்கவிடாமல் துரத்தி விட்டதாக | மீனவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் புகார். | | |
| 2308. | 14.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதியை அடுத்துள்ள பச்சேரி கிராம பொது மக்கள் பயன்படுத்தும் குடிநீர் கிணற்றில் விஷம் கலந்துள்ளதாக கிராம மக்கள் புகார். மண்டல மாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த 57 பேர் மீது காவலர்கள் வழக்கு. | – | தமிழ்சுடர் |
| 2309. | 14.09.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் கருப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த வைரப்பன் மகள் இந்துமதி. தனது மகளின் திருமண உதவித் தொகை கேட்டு சமூக நல விரிவாக்க அலுவலர் ஏ. புனிதவதியை அணுகினார். அவர் ரூ. 1200 லஞ்சம் கேட்டதாக வைரப்பன் புகார். | லஞ்சம் | தமிழ்சுடர் |
| 2310. | 14.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** மதுரை புதூர் கன்னிமாரியம்மன் கோயில் 3வது தெருவில், பாண்டியன் கூட்டுறவு அங்காடி சார்பில் ரேஸ்கோர்ஸ் கிளை ரேசன் கடை கடந்த 1 ந்தேதி முதல் 13 ம்தேதி வரை பூட்டிக் கிடந்ததால் பொதுமக்கள் கடையைத் திறக்ககோரி முற்றுகை. | –– | தினகரன் |
| 2311. | 15.09.2011 | **மதுரை மாவட்டம்:** கோ.புதூரை அடுத்த சம்பக்குளத்தைச் சேர்ந்த பாண்டி மனைவி புவனேஸ்வரி.(27). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த புவனேஸ்வரி தூக்கிட்டுத் தற்கொலை. மனைவியை தற்கொலைக்கு தூண்டியதாக பாண்டி கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை & தற்கொலை | தினத்தந்தி |
| 2312. | 15.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் கான்சாபுரத்திலிருந்து வ. புதுப்பட்டி வழியாக அரசு பேருந்து வந்தது. பேருந்தில் எறிய ஸ்ரீவி. ஆர்.சி.உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவர் கவியரசன்(16). ஸ்ரீவி.சி.எம்.எஸ்., பள்ளி 9ம் வகுப்பு மாணவர் பிரதாப்(16), பிளஸ் 2 மாணவர் பிரசாதி(16) மூவருக்கும் தகராறு. பஸ் ஸடாண்டு காவலர்கள் மாணவர்கள் மீது தடியடி. | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2313. | 15.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே வலையபட்டியைச் சேர்ந்த ஆசிரியர் மாலா. வலையபட்டியைச் சேர்ந்த ரமேஷ், மகாலெட்சுமி, ஜான்சி, அன்புச்செல்வி, மற்றும் ஆனந்த் ஆகியோரிடம் மாலா கடன் வாங்கியிருந்தார். வாங்கிய பணத்தை விட கூடுதலாக பணம் கொடுத்தும் 5 பேரும் தன்னை மிரட்டுவதாகவும். அன்புச்செல்வியின் கணவர் காவலர் குணபாலன் தன்னை மிரட்டுவதாக மாலா புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை & கந்துவட்டிக் கொடுமை | தினகரன் |
| 2314. | 15.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** ராகிணிப்பட்டியைச் சேர்ந்த வேலு மகள் உமா(17). உமாவுக்கும் ராகினிப்பட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும், மேஜர் ஆகாமலே தனது மகளை திருமணம் செய்து | குழந்தைத் திருமணம் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்க உறவினர்கள் முயற்சிப்பதாக வேலு புகார். | | |
| 2315. | 16.09.2011 | **சேலம் மாவட்டம்:** சேலத்தில் ரோட்டில் நடந்துச் சென்ற பெண்ணிடம் நகை பறித்த மதுரையைச் சேர்ந்த சப்பாணி முருகன்(29) மற்றும் அவரது மனைவி மதி கைது. தனது கூட்டாளி வெங்கடேசனை நகைக்காக கொலை செய்ததாக முருகன் வாக்குமூலம். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தமிழ்முரசு |
| 2316. | 16.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள நாகலாபுரத்தைச் சேர்ந்த அபுபக்கர் மனைவி மகமுதா(40) வத்தலக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை. பணி முடிந்து திரும்பும் வழியில் இருச்சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர் மகமுதாவின் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தமிழ்முரசு |
| 2317. | 16.09.2011 | **மதுரை மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீன் பிடித்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையில் வழிமறித்து விரட்டியடிப்பு. | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2318. | 16.09.2011 | **மதுரை மாவட்டம்:** விக்கிரமங்கலம் அருகே அய்யப்பன்பட்டியைச் சேர்ந்த மைனர் பெண்ணை. அதே பகுதியைச் சேர்ந்த உக்கிரபாண்டி(23) என்பவருக்கு திருமணம் செய்ய முயற்சி. அரசு அதிகாரிகள் இந்த திருமணத்தை தடுத்து நிறுத்தினர். | குழந்தைத் திருமணம் தடுப்பு | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்